[1975 மார்ச் 25

மணல்மேடு பேருந்து நிலையம்.

* 457 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், மணல்மேட்டில் பேருந்து நிலையம் புதியதாக அமைக்கப்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) பேருந்து நிலைய வேலை துவக்கப்பட்டு, தரை மட்டத்திலிருந்து தூண்கள் எழுப்பப்பட்டு, மேல் தளம் காங்கிரீட் போடும் நிலையில் கட்டிடம் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த மணல் மேட்டில் ஒரு நூற்பாலை இருக்கிறது. அந்த நூற்பாலைக்குச் செல்ல வேண்டுமென்றால் இந்த பஸ் ஸ்டாண்டில்தான் இறங்கவேண்டும். அங்கு, எந்த பஸ் ஸ்டாண்டும் ஒழுங்காக இல்லை. ஆகவே, அந்தப் பகுதியில் பூராவும் பஸ் நிற்கிற இடத்தில்தான் இறங்க வேண்டுமென்று இருக்கிறதே, ஆகவே, துரிதமாக வேலை செய்து, அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். தொழிற்சாலைக்குப் பக்கத்தில் பஸ் நிற்கக்கூடிய ஸ்டாண்டுக்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட கேள்வி. பஸ் ஸ்டாண்டுக்குப் பணம் கொடுப்பது பற்றித்தான் இத்துறை ஆராயும். பஸ் எங்கெங்கே நிற்கவேண்டுமென்பதற்கான விளக்கங்கள் என்னால் சொல்ல முடியாது. ஆகவே, பஸ் ஸ்டாண்டைப் பொறுத்தவரையிலே வேலையைத் துரிதமாக முடிக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்து வருகிறோம்.

ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திலுள்ள பனை மரங்கள்.

* 458 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், சில்லாங்குளம் பஞ்சாயத்திலிருந்து ஓ. சரவணபுரம் செல்லும் சாலையில் உள்ள பனைமரங்களை அகற்றக் கோரி விண்ணப்பம் ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1975 மார்ச் 25]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) மேற்படி மரங்களை பகிரங்க ஏலத்தில் விட்டு வெட்டி அப்புறப் படுத்த கோவில்பட்டி கோட்ட ஆட்சித் தலைவர் 15—2—75 அன்று ஆணை பிறப்பித்துள்ளார். ஒட்டப்பிடாரம் தன்னியல் துணை வட்டாட்சியர் மேல் நடவடிக்கை எடுப்பார்.

திரு. எம். முத்தையா : 15—2—1975-ல் ஆணை பிறப்பித்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், அங்கு விசாரித்ததில், இதுநாள் வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, உடனடியாக ஏற்பாடுசெய்து அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, எந்த ஏலம் விட வேண்டியிருந்தாலும் 15 நாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அந்த முறைப்படி உத்தரவை ஆர்.டி.ஓ. போட்டிருக்கிறார். அங்கிருந்து தாசில்தார் ஆபிஸிற்குப் போயிருக்கிறது. அவர் அதற்கான நடவடிக்கையை எடுத்து முறைப்படி, ஏலம் போட ஏற்பாடு செய்வார்.

போக்குவரத்துக் கழகங்களில் வைப்பீட்டுத் திட்டம்

* 459 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்பத்தூர் சேரன் போக்குவரத்து நிறுவனம் பொது மக்களிடமிருந்து Fixed Deposit திட்டத்தின் அடிப்படையில் பணம் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(இ) இத்திட்டத்தை, இதர போக்குவரத்து நிறுவனங்களுக்கும் நீட் டிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1956–ஆம் ஆண்டு கம் பெனிகள் சட்டத்தின்கீழ் கடன் திரட்ட தன்னாட்சி உரிமைபெற்ற கழகங் களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. தன்னாட்சி உரிமைபெற்ற கழகமான சேரன் போக்குவரத்துக் கழகம், வைப்பீட்டுத திட்டத்தின்கீழ் பொது மக்களிடமிருந்து கடன திரட்டியுள்ளது.

(இ) சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகமும் குறித்தகால வைப் பீட்டுத் திட்டத்தின்கீழ் பொதுமக்களிடமிருந்து கடன் திரட்டியுள்ளது. ஏனைய கழகங்கள் பொதுமக்களிடமிருந்து கடன் திரட்டவில்லை. அக் கழகங்கள் விரும்பினால், அவை இத் திட்டத்தின்கீழ் கடன் திரட்டலாம்.